# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு மே மாதம் (11.05.2021) 11 – ஆம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>11.05.2021</td><td>பொருள் – 1<br>மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மணப்பாறை நகர வருகையினை முன்னிட்டு பொத்தமேட்டுப்பட்டி முதல் மதுரை ரோடு பகுதி வரை JCB கொண்டு முட்செடிகள் அப்புறப்படுத்துதல் பள்ளங்கள் சரி செய்தல் பணி ரூ .38,000/- மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.3536/2020/எச்2)</td><td>தீர்மான எண்.942<br>பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>11.05.2021</td><td>பொருள் – 2<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காவேரி குடிநீர் குழாய் புதிய இணைப்பிற்கு ஆண்டு தோறும் 5% சென்டேஜ் கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் கீழ்க்கண்டவாறு உயர்வு செய்ய மன்றப்பொருள் அனுமதி வேண்டடப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>சாலை விபரம்</th><th>மீட்டர் அளவு</th><th>2019–20 தொகை ரூ.</th><th>2020–21 தொகை ரூ.</th><th>2021–22 தொகை ரூ.</th><th>2019–20 மேற்பார்வை கட்டணம்</th><th>2020–21 மேற்பார்வை கட்டணம்</th><th>2021–22 மேற்பார்வை கட்டணம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">தார் சாலை</td><td>0 முதல் 30 வரை</td><td>3680/-</td><td>3864/-</td><td>4060/-</td><td rowspan="7">1940/–</td><td rowspan="7">2040/–</td><td rowspan="7">2140/–</td></tr>
<tr><td>31 முதல் 90 வரை</td><td>4670/-</td><td>4904/-</td><td>5150/-</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">சிமெண்ட் சாலை</td><td>0 முதல் 30 வரை</td><td>4260/-</td><td>4473/-</td><td>4700/-</td></tr>
<tr><td>31 முதல் 90 வரை</td><td>5220/-</td><td>5481/-</td><td>5755/-</td></tr>
<tr><td rowspan="2">3</td><td>இன்டர்னல் பிளம்பிங் தார் சாலை</td><td>0 முதல் 30 வரை</td><td>3152/-</td><td>3310/-</td><td>3476/-</td></tr>
<tr><td>இன்டர்னல்</td><td>0 முதல் 30 வரை</td><td>3220/-</td><td>3381/-</td><td>3550/-</td></tr>
</table></td><td>தீர்மான எண்943<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td></td><td>பிளம்பிங் சிமெண்ட் சாலை</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr></table> **அலுவலகக்குறிப்பு :-**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 11.05.2021 | **பொருள் – 3**<br>மணப்பாறை நகராட்சிக்கட்பட்ட 1 முதல் 27 வார்டு பகுதியிலும் குடிநீர் குழாயில் மினி மோட்டார்களை பயன்படுத்தி குடிநீர் எடுப்பதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பொது மக்களிடையை விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தமைக்கான செலவினம் ரூ.4500/–மேறகொண்டதற்கும் மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு–15–ன் கீழ் பணி செய்து முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15– கீழ பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவினத்தையும் வருவாய் நிதியிலிருந்து மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.287/2021/இ2) | **தீர்மான எண்.944 அனுமதிக்கப்பட்டது.** |
| 11.05.2021 | **பொருள் – 4**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் ஈப்பு TN 45 BZ **7050–**க்கு JOINT O/H , 4 WHEEL GREASE PACKING மற்றும் WATTER WASH ஆகிய பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.14262.00/-க்கு திருச்சி சிவா ஆட்டோ மொபைல்சில் பணி மேற்கொள்ளவும் தேர்தல்பணி மற்றும் குடிநீர் விநியோகம் பணி ஆய்வுகள் மேற்கொள்ளவும் ஈப்பு வாகனம் அவசியம் இயங்கவேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கானும் செலவினதொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | **தீர்மான எண்.945 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 11.05.2021 | **பொருள் – 5**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட செவலூர் கிராமம் , சர்வே வார்டு 'D' பிளாக் 1 நகரளவு எண்.6/3ஏ மற்றும் 6/3பி இவற்றில் அடங்கிய 2 ஏக்கர் 42 செண்ட் (9793.39 சதுர மீட்டர்) பரப்பளவுள்ள இடத்தில் புதிய மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி , திருச்சிராப்பள்ளி, தில்லை நகர் கதவிலக்கம் D79/1B, 8வது கிராஸ் என்ற முகவரியை சேர்ந்த திரு.கே.எம்.நடராஜன் மற்றும் திரு.எ.தியாகராஜன் ஆகியோர் நகராட்சிக்கு விண்ணப்பம் செய்ததன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு மேலனுப்பப்பட்டது . இவ்விண்ணப்பம் இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் , நகர் ஊரமைப்புத்துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு , மேற்படி அலுவலக கடித ந .க.எண்.2273/2020/திமா3, நாள்.06.11.2020-ன்படி, சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் செய்து அனுப்பிவைக்கப்பட்டு, கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி , சாலைகள், பூங்கா, பொது உபயோகப்பகுதி உள்ளிட்டவைகளை நகராட்சிக்கு தானமாக வழங்கிட அறிவுறுத்தப்பட்டிருந்தது.<br>மேற்காணும் நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநர் , கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி , மனுதாரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் , சாலை அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளபடி தார்சாலைகள் அமைத்து மழைநீர் வடிகால் வசதி மற்றும் சிறுபாலங்கள் ஆகியவற்றையும் நிர்மாணம் செய்துள்ளார்கள் . மேலும், தெரு மின்விளக்கு கம்பங்கள் அமைப்பதற்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ .1,54,000/- மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்குண்டான மதிப்பீட்டுத் தொகை ரூ .1,80,000/- ஆகக் கூடுதல் ரூ.3,34,000/-ஐ நகராட்சி கருவூலத்தில் 12.03.2021-ல் பற்றுச்சீட்டு எண் .085/01/1/20-21/0016127 வாயிலாக செலுத்தியுள்ளீர்கள்.<br>புதிய மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரப்பட்டதன் அடிப்படையில் , சாலை அமைப்பு வரைபடத்தில் ஒதுக்கீடு செய்துள்ளபடி சாலைகள் , மூலைமுடுக்குகள், பூங்கா, பொது உபயோக இடங்கள் ஆகியவற்றை மனுதாரர்கள் நகராட்சிக்கு தானமாக வழங்கி மேற்படி தானபத்திரம் மணப்பாறை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் .1949/2021 நாள்.22.03.2021-ல் தானபத்திரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. சாலை அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளபடி , தானமாக பெறப்பட்ட பொது ஒதுக்கீடுகளின் விவரங்கள் மற்றும் தார்சாலை அமைக்கப்பட்ட விவரங்களை தெரிவித்து, நகர் ஊரமைப்பு இணை இயக்குநருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதையடுத்து ஒப்புதல் கோரப்பட்ட மனைப்பிரிவிற் கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு , மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம .வ/ந.ஊ.இ.இ /(தி.மா) எண்.16/2021 என எண்ணிடப்பட்டு, மேற்படி துறையின் கடித ந .க.எண்.2273/2020/தி.மா.3 நாள்.15.04.2021-ன்படி ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது . இக்கடிதத்தில் மனைப்பிரிவு நிபந்தனை கள் தெரிவிக்கப்பட்டு 42 மனைகள் உருவாக்கப்பட்டு , நிபந்தனைகளை பூர்த்தி | **தீர்மான எண்.946**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் மனுதாரர்கள், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மனைப்பிரிவு விண்ணப்பக்கட்டணம் ரூ ,12,000/- மற்றும் மனைப்பிரிவு கூராய்வு மற்றும் அனுமதிக்க ட்டணம் ரூ .30,000/- ஆக மொத்தம் ரூ .42,000/- நகராட்சி கருவூலத்தில் 06.05.2021-ல் பற்றுச்சீட்டு எண் .085/01/1/21-22/0001149/ நாள்.07.05.2021 வாயிலாக நகராட்சிக்கு செலுத்தியுள்ளார்கள்.<br>எனவே, மனைப்பிரிவு உரிமையாளர்களால் தானப்பத்திர எண் .1949/2021 நாள்.22.03.2021-ன்படி தானமாக வழங்கப்பட்டுள்ள சாலைகள், பூங்கா, மூலைமுடுக்குகள், பொது உபயோகப்பகுதிகளை தானமாக பெற்றுக்கொள்ளவும், நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 42 மனைகள் கொண்ட, வார்டு 'D' பிளாக் 1, நகரளவு எண்.6/3ஏ மற்றும் 6/3பி-ல் 9793.39 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.2623/2020/எப்1<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**